www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

V12Eco

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
இரண்டாம் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2023

-----

வகுப்பு 12

நேரம்: 3.00 மணி | பொருளியல் | மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - அ

**I. பொருத்தமான விடையை தெரிவு செய்யவும்:** **20×1=20**

1) முதலாளித்துவத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
அ) ஆடம்ஸ்மித் ஆ) காரல் மார்க்ஸ் இ) தக்கேரி ஈ) ஜே.எம்.கீன்ஸ்

2) கீழ்வருவனவற்றுள் எது ஒட்ட கருத்துரு?
அ) சட்டைகளின் எண்ணிக்கை ஆ) மொத்த சொத்து
இ) மாத வருமானம் ஈ) பண அளிப்பு

3) கீன்ஸின் வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் கோட்பாட்டில், ………… பொருளாதார மந்த நிலைக்குக் காரணமாக உள்ளது.
அ) குறைவான உற்பத்தி ஆ) அதிகத் தேவை இ) நெகிழ்வற்ற அளிப்பு
ஈ) உற்பத்தித்திறன் ஒப்பிடும் போது மிகக் குறைந்தளவு மொத்தத் தேவை

4) கீன்ஸின் கருத்துப்படி, முதலீடு MECஐயும் ………… சார்ந்தது.
அ) தேவையையும் ஆ) அளிப்பையும்
இ) வருவாயையும் ஈ) வட்டிவீதத்தையும்

5) விலைவாசி மெதுவாக உயரும்பொழுது அது அழைக்கப்படுவது
அ) தாவும் பணவீக்கம் ஆ) மிதமான பணவீக்கம்
இ) உயர் பணவீக்கம் ஈ) பணவாட்டம்

6) ரெப்போவிகிதம் என்பதன் பொருள்
அ) வணிக வங்கிகள் ரிசர்வ் வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டிவிகிதம்
ஆ) ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்
இ) அந்நிய செலாவணி விகிதம் ஈ) நாட்டின் வளர்ச்சி விகிதம்

7) கீழ்கண்டவைகளில் எவை வெளிநாட்டு நேரடி மூலதனத்திற்கான உதாரணமாக கூற முடியாது?
அ) வெளிநாட்டில் தன்னூர்தி ஆலை அமைத்தல்
ஆ) வெளிநாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற இரும்பு உருக்கு ஆலையை வாங்குதல்
இ) வெளிநாட்டு துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தை வாங்குவது
ஈ) முழு தனி உரிமையுடன் ஒரு புதிய நிறுவனத்தை வெளிநாட்டில் தொடங்குவது

8) ஆசியான் அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு
அ) 1965 ஆ) 1967 இ) 1972 ஈ) 1997

9) கீழே உள்ள வாக்கியங்களைக் கருத்தில் கொண்டு, சரியான ஒன்றை அடையாளம் காண்க.
i) மாநில பட்டியலிலோ, இணைப்பு பட்டியலிலோ குறிப்பிடப்படாத வரியை விதிப்பதற்கு மைய அரசுக்கு தனி உரிமையில்லை.
ii) அரசியலமைப்பு சில வரிகளை மைய அரசு பட்டியலில் இருந்து மாநில அரசு பட்டியலுக்கு மாற்ற வசதி செய்கிறது.
அ) i மட்டும் ஆ) ii மட்டும் இ) இரண்டும் ஈ) ஏதுமில்லை

10) தூய பொதுப் பொருட்களில், நுகர்ச்சி என்பது …………
அ) போட்டி உடையது ஆ) போட்டியற்றது
இ) இரண்டும் ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல

11) எம்.என்.ராய் வழங்கியத் திட்டம் கீழ்கண்டவைகளில் எது?
அ) காங்கிரஸ் திட்டம் ஆ) மக்கள் திட்டம்
இ) பாம்பே திட்டம் ஈ) இவை எதுவுமில்லை

12) கேள்வித்தாள் மூலம் புள்ளிவிவரம் திரட்டப்பட்டால் அது …………
அ) முதல்நிலை விவரம் ஆ) இரண்டாம் நிலை விவரம்
இ) வெளியிடப்பெற்ற விவரம் ஈ) தொகுக்கப்பட்ட விவரம்

13) ………… என்பது பணவீக்க விகிதம் குறைந்து செல்வது ஆகும்.
அ) எதிர்பணவீக்கம் ஆ) பணவாட்டம்
இ) தேக்கவீக்கம் ஈ) மந்தம்

14) வணிக வங்கிகளின் பணிகளின் இருபெரும் பிரிவு
அ) முதன்மைப் பணிகள் ஆ) இரண்டாம் நிலை பணிகள்
இ) மற்ற பணிகள் ஈ) மேற்சொன்ன அனைத்தும்

15) பன்னாட்டு வாணிகம் உள்நாட்டு வாணிகத்திலிருந்து வேறுபடக்காரணம்
அ) வணிகக் கட்டுப்பாடுகள் ஆ) உற்பத்திக் காரணிகள் இடம்பெயர இயலாமை
இ) நாடுகளின் கொள்கை வேறுபாடுகள் ஈ) மேற்சொன்ன அனைத்தும்

16) பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு கீழ்க்கண்ட இதன் துணை அமைப்பாகும்.
அ) பன்னாட்டுப் பண்நிதியம் ஆ) உலக வங்கி இ) சார்க் ஈ) ஆசியான்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



17) பொதுக்கடனை மாற்றுதல் என்பது
அ) பழைய கடன் பத்திரங்களுக்குப் பதிலாக புதிய கடன் பத்திரங்களை மாற்றுதல்
ஆ) அதிக வட்டிவீதம் கொண்ட கடன் பத்திரங்களுக்குப் பதிலாக குறைவான வட்டிவீதம் கொண்ட கடன் பத்திரங்களைக் கொடுத்தல்
இ) குறுகிய கால பத்திரங்களுக்குப் பதிலாக நீண்ட கால பத்திரங்களைத் தருதல்
ஈ) மேற்கூறிய அனைத்தும்

18) சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை ............
அ) சந்தைப் பொருட்கள் ஆ) சந்தையிட பொருட்கள்
இ) இரண்டும் ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல

19) பின்வருவனவற்றுள் பொருளாதார வளர்ச்சியின் தன்மை இல்லாதவை எது?
அ) வளர்ந்த நாடுகளை பற்றியது ஆ) படிப்படியான மாற்றம்
இ) எண்களின் அடிப்படையில் அமைந்தது ஈ) விரிவான கருத்து

20) ஒட்டுறவு என்ற கருத்தினை முதலில் பயன்படுத்தியவர்
அ) நியூட்டன் ஆ) பியர்ஸன் இ) ஸ்பியர்மேன் ஈ) கால்டன்

பகுதி - ஆ

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடை அளிக்கவும். வினா எண் 30 கட்டாயம் விடை அளிக்கவும்.** **7×2=14**

21) ''பொருளாதாரம்'' என்பதன் பொருள் யாது?
22) ஒலி மாசு வினை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை கூறுக.
23) முடுக்கி - வரையறு.
24) GSTயின் கூறுகள் யாவை?
25) உடன்பாடில்லா (Frictional) வேலையின்மை பற்றி சிறுகுறிப்பு வரைக.
26) வெளி அங்காடி நடவடிக்கை என்பதன் பொருள் கூறு.
27) பன்னாட்டு வாணிகம் வரைவிலக்கணம் தருக.
28) பொருளாதார வளர்ச்சியிலிருந்து முன்னேற்றத்தை வேறுபடுத்துக.
29) புள்ளியியல் என்றால் என்ன?
30) நெகிழிப் பணம் என்றால் என்ன? உதாரணம் தருக.

பகுதி - இ

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடை அளிக்கவும். வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** **7×3=21**

31) கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக.
32) J.B. சே விதியில் விளைவுகளைப் பற்றி குறிப்பு வரைக.
33) கீன்ஸின் நுகர்வு சார்ந்த உளவியல் விதியின் கருத்துகளைக் கூறுக.
34) பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?
35) நபார்டின் பணிகள் யாவை?
36) மாறுகின்ற பண மாற்று வீதத்தின் பொருள் தருக.
37) நேர்முக மற்றும் மறைமுக வரிகளுக்கிடையேயான மூன்று வேறுபாடுகளைக் கூறுக.
38) பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் உள்ள தொடர்பினை சுருக்கமாக கூறு.
39) இந்தியாவில் பொருளாதாரத் திட்டமிடல் பரிணாம வளர்ச்சியை மதிப்பிடுக.
40) ஒட்டுறவுப் பகுப்பாய்வின் பயன்களை கூறுக.

பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்:** **7×5=35**

41) அ) பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி. **(அல்லது)**
ஆ) தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள் யாவை?

42) அ) ADF மற்றும் ASFக்கு இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரி. **(அல்லது)**
ஆ) கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.

43) அ) பணத்தின் பணிகளை விளக்குக. **(அல்லது)**
ஆ) வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக.

44) அ) உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்குமிடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும். **(அல்லது)**
ஆ) பன்னாட்டுப் பணநிதியத்தின் நோக்கங்களை விளக்குக.

45) அ) தேசிய வருவாயின் முக்கியத்துவத்தை விவரி. **(அல்லது)**
ஆ) மொத்த தேசிய உற்பத்திக்கும் சுற்றுச்சூழல் தரத்திற்கும் இடையேயான தொடர்பினை சுருக்கமாக விளக்குக.

46) அ) பொருளாதார முன்னேற்றத்தை தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகளை விவாதிக்கவும். **(அல்லது)**
ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து Y மீது X மற்றும் X மீது Y ஆகியவற்றினை கண்டறிக.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Y : | 45 | 48 | 50 | 55 | 65 | 70 | 75 | 72 | 80 | 85 |
| X : | 25 | 30 | 35 | 30 | 40 | 50 | 45 | 55 | 60 | 65 |

47) அ) அரசுச் செலவு அதிகரிப்புகளுக்கான காரணங்கள் யாவை? **(அல்லது)**
ஆ) இந்திய சமூக பொருளாதார மேம்பாட்டில் டபிள்யூ.டி.ஓ-ன் பங்கினை விவாதிக்க.

----------

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com